# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8093883

1. District மாவட்டம் : திருச்சி   PS: காவல்நிலையம்: ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு   Year ஆண்டு: 2019   FIR No.: மு.த.அ. எண்: 06   Date: நாள்: 09.04.2019

2. (i) Act சட்டம்: IPC   Sections பிரிவுகள்: 120(B), 109, 406, 409,

   (ii) Act சட்டம்: IPC   Sections பிரிவுகள்: 420, 468, 471, 477(A)

   (iii) Act சட்டம்: Prevention of Corruption Act 1988   Sections பிரிவுகள்: 13(1)(c) r/w 13(1)(d) 13(2)

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்   Date from : நாள் முதல்: 2014   Date to : நாள் வரை: 2015

   Time Period : நேர அளவு   Time from : நேரம் முதல்   Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்: 09.04.2019   Time : நேரம்: 11.00 hrs

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்   Time : நேரம்

4. Type of Information : Written/ ~~Oral~~ : தகவலின் வகை : எழுத்து மூலம் / ~~வாய் மொழியாக~~ : எழுத்து மூலமாக கணினியால் தட்டச்சு செய்யப்பட்டது

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சுமார் 55 KM வடக்கே
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும்

   Beat Number : முறைக் காவல் எண்   (b) Address : முகவரி: கோம்பை கிராமம், துறையூர் தாலுக்கா, திருச்சி மாவட்டம்.

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : —   District : —
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்: F. ஜேவியர் ராஜ்   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்: பிரான்சிஸ்

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு: 1969   (d) Nationality : நாட்டினம்: இந்தியன்   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்: —

   Date of Issue : வழங்கப்பட்ட நாள்: —   Place of Issue : வழங்கப்பட்ட இடம்: —

   (f) Occupation : தொழில்: காவல் ஆய்வாளர்   (g) Address : முகவரி: ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருச்சிராப்பள்ளி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   கலம் 14ல் (அ) குறிப்பிடப்பட்டுள்ளார்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   உரிய விசாரணை செய்து உத்தரவு பதிவு செய்யப்படுகிறது

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : -
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

திருச்சி, சிறப்பு நீதிபதி (ஊழல் தடுப்பு சட்டம் 1988) நடுவர் நீதிமன்றம் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

காலம் 7ல் கண்ட எதிரிகளின் பெயர்கள்

1) திரு.பிச்சைமணி (தற்காலிக பணி நீக்கம்), முன்னாள் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம பஞ்சாயத்து), துறையூர் ஒன்றியம், திருச்சி மாவட்டம்.

2) திருமதி.இந்திரா, முன்னாள் கோம்பை ஊராட்சிமன்ற தலைவர், துறையூர் ஒன்றியம், திருச்சி மாவட்டம்.

3) திருமதி.கலாநிதி, உதவி செயற்பொறியாளர், முன்னாள் துறையூர் ஒன்றியம், தற்சமயம் உதவி செயற்பொறியாளர், சாலைகள் மற்றும் பாலங்கள், உட்கோட்டம் திருச்சிராப்பள்ளி.

4) திரு.பிரிட்டோ பால்ராஜ், முன்னாள் இளநிலை பொறியாளர், துறையூர் ஒன்றிய அலுவலகம், திருச்சிராப்பள்ளி தற்சமயம் உதவி செயற்பொறியாளர், திருவாரூர் உட்கோட்டம், (Not permitted to retire from service) திருவாரூர் மாவட்டம் மற்றும்

5) திரு.ஜெய்சங்கர், ஒப்பந்ததாரர், துறையூர் ஒன்றியம், திருச்சிமாவட்டம்.

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed [illegible] Rank [illegible] to take up the Investigation / Refused Investigation / transferred to PS [illegible] on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .......................... பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

09/04/19

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 09.04.2019
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 12.30 hrs

Name: பெயர் F. [illegible]
Rank: நிலை [illegible] No. எண்
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,

திருச்சி ஊ.த.க. பிரிவு கு.எண். 06/2019–ன் முதல் தகவல் அறிக்கை தொடர்ச்சி.......

தமிழ்நாடு விழிப்பு பணி ஆணையர், மற்றும் நிர்வாக சீர்திருத்த ஆணையர் அவர்களின் கடித எண். 5140/VC-II/2018-1 Dated 08.01.2019 படியும், தமிழ் நாடு அரசு ஆணை எண். GO (3D) No12, Rural Development and Panchayat Raj, (E2) Department Dt. 21.02.2019 படியும், சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குனரக நமுனா எண். DE 46/2016/RDP/HQ நாள் 26.02.2019ல் கிடைக்கப்பெற்ற தகவலை கொண்டு (1) திரு.பிச்சைமணி (தற்காலிக பணி நீக்கம்), முன்னாள் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம பஞ்சாயத்து), துறையூர் ஒன்றியம், திருச்சி மாவட்டம் (2) திருமதி.இந்திரா (தனி நபர்), முன்னாள் கோம்பை ஊராட்சிமன்ற தலைவர், துறையூர் ஒன்றியம், திருச்சி மாவட்டம், (3) திருமதி.கலாநிதி, உதவி செயற்பொறியாளர், முன்னாள் துறையூர் ஒன்றியம், தற்சமயம் உதவி செயற்பொறியாளர், சாலைகள் மற்றும் பாலங்கள், உட்கோட்டம் திருச்சிராப்பள்ளி, 4) திரு.பிரிட்டோ பால்ராஜ், முன்னாள் இளநிலை பொறியாளர், துறையூர் ஒன்றிய அலுவலகம், திருச்சிராப்பள்ளி தற்சமயம் உதவி செயற்பொறியாளர், திருவாரூர் உட்கோட்டம் (Not permitted to retire from service) திருவாரூர் மாவட்டம் மற்றும் 5) திரு.ஜெய்சங்கர் (தனி நபர்), ஒப்பந்ததாரர், துறையூர் ஒன்றியம், திருச்சி மாவட்டம் என்பவர்கள் மீது வழக்கு பதிவு செய்கிறேன். மேற்கண்ட 1, 3 மற்றும் 4 எதிரிகள் ஊழல் தடுப்பு சட்டம் 1988 பிரிவு 2(c) யின் படி பொது ஊழியர்கள் ஆவார்கள். எதிரிகள் (2) மற்றும் (5) ஆகிய இருவரும் தனிநபர்களாவர்.

மேற்கண்ட 1 முதல் 5 எதிரிகள் திருச்சி மாவட்டம், துறையூர் ஒன்றியம், கோம்பை ஊராட்சி எருமைப்பட்டி கிராமத்தில் முறைபடியாக ஊராட்சி மன்றத்தை கூட்டி அனுமதி பெற்று அதன் மூலமாக மேற்படி அனுமதிக்கும் தொகையை கையாடல் செய்து அரசாங்கத்திற்கு இழப்பீடு ஏற்படுத்த வேண்டும் மற்றும் குற்றமுறு நம்பிக்கை மோசடி செய்ய வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தோடு கூட்டு சதி செய்து முறைபடியாக மேற்படி இனத்தை நடத்த போவதாக ஊராட்சி மன்றத்தில் நம்பிக்கை ஏற்படுத்தி கோம்பை ஊராட்சி மன்ற தலைவர் என்ற வகையில் குற்ற அலுவலர் திருமதி.இந்திரா தனது தலைமையில் 31.12.2013 அன்று கூட்டம் நடத்தி, கூட்டமன்ற அறிவிப்பு பதிவேட்டில் கூட்ட மன்ற பொருள் 8 ஆகவும், அதை நிறைவேற்றவும் தீர்மானம் செய்து அதில் ஊராட்சி மன்ற தலைவர் குற்ற அலுவலர் கையெழுத்திட்டும், அதில் துணைத்தலைவர் திருமதி.கமலம் மற்றும் வார்டு உறுப்பினர்கள் கையொப்பம் பெற்றுள்ளனர்.

மேலும், மேற்கண்ட கூட்டு சதியை நிறைவேற்றும் பொருட்டு மேற்கண்ட பணிக்கு 2014-2015 ஆம் வருடத்தில் ரூ.2,00,000/- மதிப்பீட்டில் துறையூர் ஒன்றியம், கோம்பை ஊராட்சி, எருமைபட்டி கிராமத்தில் உள்ள குடிநீர் கிணற்றை ஆழப்படுத்த வேண்டி டெண்டர் விடப்பட்டது, அந்த டெண்டரில் குறிப்பிட்டுள்ள தொகையை விட குறைவான விலைப்புள்ளியில் ரூ.1,99,980/-க்கு குற்ற சதியை நிறைவேற்றும் பொருட்டு ஏலம் கேட்ட குற்ற அலுவலர் திரு.ஜெய்சங்கர் என்பவருக்கு குற்ற அலுவலர் திருமதி.இந்திராவால் 27.03.2015 அன்று குற்ற சதியை நிறைவேற்றும் பொருட்டு பணி உத்தரவு கொடுத்ததுடன், மேற்படி குற்றசதி தொடர்பாக, குற்ற அலுவலர் திரு.பிரிட்டோ பால்ராஜ், இளநிலை பொறியாளர் பொய்யான அளவில் முன் அளவு எடுத்து, குற்ற அலுவலர் திருமதி.கலாநிதி, உதவி பொறியாளர் அவர்களிடம் கொடுத்ததில் அவர் திரு.பிரிட்டோ கொடுத்த பொய்யான அளவை குற்ற சதியை நிறைவேற்றும் பொருட்டு ஸ்தல ஆய்வு செய்து, மேல் அளவு செய்தும், குடிநீர் கிணறு சுற்றுசுவரில் இருந்து 11 அடி ஆழம் இருப்பதாகவும், மேற்கொண்டு 22 அடி ஆழம் தோண்ட வேண்டும் என்று பொய்யான விபரத்தை ஒப்பந்ததாரர் குற்ற அலுவலர் ஜெய்சங்கரிடம் தெரிவித்துள்ளார்.

பின்னர், மேற்படி குற்றசதியின் தொடர்பாக குடிநீர் கிணற்றினை இளநிலை பொறியாளர் குற்றஅலுவலர் திரு.பிரிட்டோ பால்ராஜ் மற்றும் உதவி செயற்பொறியாளர் குற்ற அலுவலர் திருமதி.கலாநிதி ஆகியோர் ஸ்தல ஆய்வு செய்து, தரைமட்டத்தில் இருந்து 9.50 மீட்டர் ஆழம் தோண்டியதாக பொய்யாக அளவீட்டு உண்மைக்குமாறாக, மோசடியாக பொய் அளவை உண்மை என நம்பவைக்கும் நோக்கத்தில் புத்தகத்தில் பதிவு செய்தும், உதவி செயற்பொறியாளர் குற்ற அலுவலர் திருமதி.கலாநிதி அவர்கள் கூட்டுசதியின் காரணமாக பொய்யாக மேல்அளவு 9.50மீட்டர் தோண்டியதாக குறிப்பிட்டு பின்னர் மேற்படி பணிக்கான மதிப்பீட்டு தொகை ரூ.1,99,980/-ல் வைப்பு நிதி, வருமானவரி மற்றும் விற்பனை வரி போக ரூ.1,84,980/-க்கு அரசு பணத்தை அரசுக்கு இழப்பீடு செய்ய வேண்டும், எதிரிகள் சட்டத்திற்கு புறம்பான பணப்பயன் பெறவேண்டும் என்ற நோக்கத்தில் பட்டியல் தயார் செய்து, வட்டார வளர்ச்சி அலுவலர் குற்ற அலுவலர் திரு.பிச்சைமணி அவர்களிடம் சமர்ப்பிக்க, திரு.பிச்சைமணி மேற்படி குற்றசதியின் காரணமாக அரசுக்கு இழப்பீடு ஏற்படுத்தி சட்டத்திற்கு புறம்பாக பயனடையும் நோக்கத்தில் குற்ற அலுவலர் திரு.ஜெய்சங்கருக்கு காசோலை வழங்கியுள்ளார்.

மேற்கண்ட பணி குறித்து ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவின் மூலம் மதிப்பீடு செய்ய சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, இயக்குநரகம் மூலம் கேட்டுக்கொண்டதற்கிணங்க மேலாண்மை இயக்குநர், தலைமை அலுவலகம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை அவர்களின் உத்தரவின்படி நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், பாதாள சாக்கடை திட்ட கோட்டம், அரியலூர் மூலம் 14.03.2017 அன்று குற்ற அலுவலர் திரு.பிச்சைமணி, முன்னாள் வட்டார வளர்ச்சி அலுவலர், துறையூர், குற்ற அலுவலர் திரு.பிரிட்டோ பால்ராஜ், முன்னாள் இளநிலை பொறியாளர், துறையூர் ஒன்றியம், திருச்சி மாவட்டம், தற்சமயம் உதவி செயற்பொறியாளர் திருவாரூர் உட்கோட்டம் (Not permitted to retire from service) திருவாரூர் மாவட்டம், குற்ற அலுவலர் திருமதி.கலாநிதி, உதவி செயற்பொறியாளர், துறையூர் ஒன்றியம் தற்சமயம் உதவி செயற்பொறியாளர், சாலைகள் மற்றும் பாலங்கள், உட்கோட்டம் திருச்சிராப்பள்ளி ஆகியோர் முன்னிலையில் மதிப்பீடு செய்யப்பட்டு மேற்படி மதிப்பீட்டு அலுவலரின் அறிக்கையில் மொத்தம் தரை மட்டத்தில் இருந்து 5.70 மீட்டர் ஆழம் மட்டுமே அளவுள்ளது என மதிப்பீட்டு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், 3.80 மீட்டர் ஆழம் கூடுதலாக தோண்டப்பட்டுள்ளதாக அளவீட்டு புத்தகத்தில் எதிரிகள் பதிந்துள்ளார்கள்.

மேற்படி கிணறு தோண்டப்பட்ட பணிக்கான அளவீட்டு புத்தகத்தில் உள்ளது போல் கிணற்றின் ஆழம் தரை மட்டத்தில் இருந்து 9.50 மீட்டர் இல்லை என்பதும், மதிப்பீட்டு அலுவலரின் அறிக்கையின்படி தரைமட்டத்தில் இருந்து 5.70 மீட்டர் ஆழம்தான் கிணறு தோண்டப்பட்டுள்ளது என்பதும், 3.80 மீட்டர் ஆழம் வித்தியாசம் கண்டறியப்பட்டும் அதற்கு தோராயமான தொகை ரூ.1,40,608/– என மதிப்பீட்டு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, குற்றமுறு சதியின் அடிப்படையில் குற்ற அலுவலர்கள் அரசுப்பணத்தை இழப்பீடு செய்யும் நோக்கத்தில் பொய்யான விபரத்தை மதிப்பீட்டு புத்தகத்தில் குறிப்பிட்டு அதனை உண்மையானது என நம்ப வைத்து 5.70 மீட்டர் தோண்டிய விபரத்தை மறைத்து 9.50 மீட்டர் தோண்டியதாக குற்ற அலுவலர் திரு.பிரிட்டா பால்ராஜ், இளநிலை பொறியாளர், குற்ற அலுவலர் திருமதி.கலாநிதி உதவி செயற்பொறியாளர் ஆகியோர் கணக்கிட்டும் வட்டார வளர்ச்சி அலுவலர் குற்ற அலுவலர் திரு.பிச்சைமணி அவர்களால் ஒப்பந்ததாரர் குற்ற அலுவலர் திரு.ஜெய்சங்கருக்கு வழங்கப்பட்ட தொகை ரூ.1,84,980/–ல் ரூ.1,40,608/– அரசுக்கு நிதியிழப்பு ஏற்படுத்தியுள்ளனர். எனவே, மேற்கண்ட எதிரிகள் சட்டப்பிரிவுகள் **120(B), 420, 406, 468, 409, 471, 477(A) IPC and 13(1)(d) r/w 13(1)(c) Prevention of Corruption Act 1988** ன் படியின் கீழான குற்ற செயல்களில் ஈடுபட்டுள்ளார்கள்.

மேற்படி குற்ற சதியின் அடிப்படையில் அரசுக்கு சொந்தமான பணத்தை இழப்பீடு ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் குற்ற அலுவலர்(2) திருமதி.இந்திரா அவர்கள் ஊராட்சி மன்ற தலைவருக்கு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 203–ன் கீழ் காசோலை வழங்கும் அதிகாரத்தினை மாற்றியமைத்த நிலையில், தன்னிச்சையாக செயல்பட்டு ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கியுள்ளார். எனவே, மேற்படி குற்றத்தை பொறுத்து குற்ற அலுவலர் திருமதி.இந்திரா பிரிவு **409 IPC r/w 13(1)(c) Prevention of Corruption Act 1988** ன் கீழ் குற்ற செயலை செய்துள்ளார்.

மேற்படி குற்ற சதியை நிறைவேற்றும் பொருட்டு குற்றமுறு சதியின் அடிப்படையில் குற்ற அலுவலர்கள் அரசு பணத்தை கையாடல் செய்து அரசுக்கு இழப்பீடு ஏற்படுத்தியும் எதிரிகள் சட்ட விரோதமாக பணப்பயன் அடைந்தும், பொய்யான ஆவணத்தை தயாரித்து அதனை உண்மை என நம்ப வைத்து குற்ற செயலுக்கு உடந்தையாக இருந்ததற்காக எதிரிகள் 1 முதல் 5 நபர்கள் வரை பிரிவு **120(B), 420, 468, 109, 409, 406, 468, 471, 477(A) IPC** மேலும் **13(1)(d) r/w 13(1)(c) Prevention of Corruption Act 1988** ன் படி குற்ற செயலை செய்துள்ளார்கள்.

மேலும், மேற்படி குற்ற அலுவலர் (2) திருமதி.இந்திரா, கோம்பை ஊராட்சி குடிநீர் தொட்டி ஆப்பரேட்டர்களுக்கு சம்பள கமிஷன் நிலுவை தொகையை பணமாக்கம் செய்துவிட்டு, ஒப்புகை சீட்டில் கையொப்பம் பெற்றுகொண்டு, ரூ.2,24,520/–ஐ உரிய நபர்களுக்கு வழங்காமலும், அரசுக்கு கணக்கில் மீள செலுத்தாமலும், அரசு பணத்தை நேர்மையற்ற முறையில் கையாடல் செய்து கோம்பை ஊராட்சி மன்ற தலைவி திருமதி.இந்திரா, சட்டப்பிரிவு **420, 409 IPC and 13(1)(c) 13(2) Prevention of Corruption 1988** படி குற்ற செய்கையில் ஈடுபட்டுள்ளார்.

மேற்கண்ட வழக்கு தொடர்பாக எதிரிகள் 1 முதல் 5 வரையானவர்கள் மீது திருச்சி ஊ.த.க பிரிவு கு.எண். 06/2019 U/s **120(B), 109, 406, 409, 420, 468, 471, 477(A) IPC** படியும் **13(1)(c)** மற்றும் **13(1)(d)** உ/இ **13(2) Prevention of Corruption Act 1988** படி என்னால் 09.04.2019 இன்று நண்பகல் 11.00 மணிக்கு வழக்கு பதிவு செய்யப்படுகிறது.

இந்த முதல் தகவல் அறிக்கையின் அசலை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்கு சிறப்பு நீதிமன்றம் திருச்சி அவர்களுக்கும் மற்றும் அதன் நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டது.

09/04/19
Insp. VACTU.